22.04.2025.

EA.04/2022 in EP.48/2018 O.S.No. 53/2012

RW1- Raj-S/o. Manuvel.

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.04.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> (4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

17. நான் வழக்கறிஞர் குமஸ்தவாக இருந்து தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன்.

18. நான் காற்றாலை நிறுவனங்களுக்கு இடம் வாங்கிக் கொடுக்கும் இடைத்தரகர் வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகிறேன் என்றும் மனுதாரர் காற்றாலை நிறுவனத்திற்கும் நான் தான் இடம் வாங்கிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

19. நான் தாக்கல் செய்துள்ள மனு தபசில் சொத்தில் காற்றாலை இருக்கும் விவரம் துலங்காது என்றால் சரிதான்.

20. வழக்கு தாக்கல் செய்யும் போது 2ம் தபசில் சொத்தில் காற்றாலை இருப்பதாக கூறி தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக தவறாகக்கூறுகின்றேன் என்றும் நான் வழக்கு தாக்கல் செய்யும் போது 2ம் தபசில் சொத்தில் காற்றாலை இருப்பதாக கூறி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

21. நான் தாக்கல் செய்துள்ள தபசில் சொத்துக்கள் அனைத்தும் புஞ்சை வகைப்பாட்டைச் சேர்ந்த நிலம் என்றால் சரிதான்.

22. மனு தபசில் சொத்துக்கள் அனைத்தும் காற்றாலை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலும் அனுபவத்திலும் என்றால் சரிதான்.

23. தீர்ப்பாணை விவரத்தில் காற்றாலையை அகற்றும் நேரத்தில் தான் மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என குறிப்பான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

24. தபசில் சொத்தை சுவாதீனம் எடுப்பதற்கான நானும், முத்துலெட்சுமி என்ற நீதிமன்ற ஊழியரும், எனது இரு நண்பர்களும் சென்றோம். நீதிமன்ற ஊழியர் முத்துலெட்சுமி காற்றாலை நிறுவனத்தின் மேலாளருக்கு அலைபேசியின் மூலம் தகவல் சொன்ன போது 1 மணிக்கு வருவதாகக் கூறினார். அப்போது மின்துறை ஊழியர்களும் ஸ்தலத்திற்கு வந்து மின் இணைப்பை துண்டித்தார்கள். அதை நான் என் அலைபேசியில் வீடியோ பதிவு செய்தேன்.

25. சுவாதீனம் எடுப்பதற்காக எனது மனுதாரர் தரப்பிலோ, நீதிமன்றத்தின் தரப்பிலோ முன்கூட்டியே மின் வாரிய ஊழியர்களுக்கு தகவல் தெரிவிக்காததால் முறையான சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

26. நான் உயர் மின் அலுவலர்களுக்கு தகவல் கொடுக்காமல் நீதிமன்ற ஊழியரை சரிசெய்து கடைநிலை மின் ஊழியரை வைத்து

நீதிமன்ற தீர்ப்பாணைக்கு எதிராக சட்ட விரோதமாக மின் இணைப்பை துண்டிப்பு செய்ததால் தவறு என மின் வாரிய அலுவலர் தீர்ப்பாய விசாரணையில் தெரியவந்ததால் மின் இணைப்பு மீண்டும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

27. 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள அசல் நிறைவேற்றுகை மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.